
# பாராயணத் தமிழ் மாலை

ஔவையார்

ஞானசம்பந்தர் நாவுக்கரசர்

சுந்தரர் மணிவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு ஆவணி 2011

# பாராயணத் தமிழ் மாலை

ஔவையார்

ஞானசம்பந்தர் நாவுக்கரசர்

சுந்தரர் மணிவாசகர்

சைவ சித்தாந்த தமிழ் நிலையம்
சூரியகாந்தி
138 ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி – 021-2222365

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

தமிழ் பக்திக்கு உரிய மொழி. தமிழிலே உள்ள பக்தி இலக்கிய வனம் மிகப் பழைமையானது, மிகப் பெரியது, அளப்பரிய அருள் அனுபவத்தை உள்ளத்திலே நிறைக்க வல்லது.

தமிழிலே உள்ள பக்தி இலக்கியங்கள் படிக்கப் படிக்கச் சுவை பயப்பவை, பாராயணம் செய்யச் செய்ய பலன்நிறைப்பவை.

நமது அருளாளர்கள் தந்த பக்திப் பனுவல்களைப் படிப்பதே ஒரு அற்புதமான ஆனந்த அனுபவம்.

இவற்றைப் படிக்கவும் பாராயாணம் செய்யவும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

தமிழ்ப் பக்தி இலக்கியங்களிலிருந்து சில தோத்திரங்களைத் தெரிந்து நாள்தோறும் பாராணயம் செய்வது அடியார்கள் பலரது வழக்கம்.

பல அடியார்களின் வேண்டுகளுக்கு இணங்க இத் தொகுப்பு வெளியிடப்படுகின்றது.

நல்ல முறையிலே இவற்றை நாள் தோறும் பாராயணம் செய்வதால் -

நினைப்பவை எல்லாமே நடக்கும்.

நல்லவற்றையே நினைக்கச் செய்யும்.

தீராத நோய்கள் தீரும்.

வாழ்க்கையிலே அமைதியும் இன்பமும் நிறையும்.

இது அனுபவ உண்மை.

ஔவையாரின் விநாயகர் அகவல், ஞானசம்பந்தரின் திருவெழுக்கூற்றிருக்கை, மணிவாசகரின் சிவபுராணம் ஆகிய மூன்றும் யாழ்ப்பாணத்து ஞானப் பெருந்தகை யோகர் சுவாமிகளின் ஆணைப்படி அவரது அடியார்களால் நாள் தோறும் பாராயணம் செய்யப்படுபவை.

அவற்றுடன் நாவுக்கரசரின் பதிகம் ஒன்றும் சுந்தரரின் பதிகம் ஒன்றும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

சைவமெய்யன்பர்கள் இவற்றை படிக்கவும் பாராயணம் செய்யவும் பயன் கொள்ளவும் இறை அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

- சாமிஜி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

**ஔவையார்**

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் கழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆநந்தத் தழுத்திஎன் செவியில்
61 எல்லை யில்லா ஆநந் தம்அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
67 வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
72 வித்தக! விநாயக! விரைகழல் சரணே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெழுகூற்றிருக்கை

ஞானசம்பந்தர்

இராகம் : சவுராஷ்டிரம் பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

ஒருரு வாயினை மானாங் காரத்(து)
ஈரியல் பாயொரு விண்முதல் பூதல
மொன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரால் நீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்(து)
இருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ(டு)
இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயுறும் அமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே மிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணிய னறியு
மனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றித்திருத்தாண்டகம்

நாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்ந்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக் கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சிவாயத் திருப்பதிகம்

சுந்தரர்

பண் : பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

இட்ட னுன்னடி ஏத்து வார்இகழ்ந்
திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை என்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்டடிதொழு
தேத்து பாண்டிக்கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

ஓவு நாள்உணர் வழியும் நாள்உயிர்
போகும் நாள்உயர் பாடைமேல்
காவு நாள்இவை என்றலாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு மண்புனல் வந்திழி பரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை யில்புகழ் எம்பி ரான்எந்தை
தம்பி ரான்என்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொ ழிந்திழி
காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வார்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

அஞ்சி னார்க்கர ணாதி என்றடி
யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள்
நல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

ஏடு வான்இளந் திங்கள் சூடினை
என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த
அழக னேஅந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்
தேன்வினை களும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற
நின்ற காவிரிக் கோட்டிடைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந்
தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம்
அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில்
ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

சாரணன் தந்தை எம்பி ரான்எந்தை
தம்பி ரான்என்பொன் மாமணியென்று
பேரெ ணாயிர கோடி தேவர்
பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

கோணிய பிறை சூடி யைக்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப்
பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத்
தார னைப்படப் பாம்பரை
நாண னைத் தொண்டன் ஊரன் சொல்லிவை
சொல்லு வார்க்கில்லை துன்பமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்
# சிவபுராணம்

**மணிவாசகர்**

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
6 வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
10 சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!
11 ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசனடி போற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!
16 ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
17 சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
22 எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
23 விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய்! விளங்(கு)ஒளியாய்!
எண்இறந்(து) எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமா(று) ஒன்றறியேன்;
புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்(து) இளைத்தேன்; எம்பெருமான்!
மெய்யேயுன் பொன்னடிகள் கண்(டு)இன்று வீடுற்றேன்;
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந்(து) அகன்ற நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமான னாம்விமலா!
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!
ஆக்கம் அள(வு)இறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்றமறை யோனே!
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்(து)அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்(பு)அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள்ஓர் ஐந்(து)உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடியமாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த்(து)எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்(து)உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
61 தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே!
62 மா(சு)அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்(று)அறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்
66 பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
67 ஆரா அமுதே அள(வு)இலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்(து) ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
70 இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!
71 அன்பருக்(கு) அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்(து)என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
75 கூர்த்தமெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
76 நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
77 போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்(று)இன்ப வெள்ளமே! அத்தா!மிக் சாய்! நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச்சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தையினுள்
83 ஊற்றான உண்ஆர் அமுதே! உடையானே!
84 வேற்று விகார விடக்(கு) உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனே! ஓ என்(று) என்று
போற்றிப்புகழ்ந்(து)இருந்து பொய்கெட்டு மெய்யானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்(டு)இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்(டு)அழிக்க வல்லானே!
89 நள்இருளில் நட்டம் பயின்(று)ஆடும் நாதனே!
90 தில்லையுள் கூத்தனே! தென்பாண்ட நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓஎன்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின், உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
95 பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்(து) ஆநந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னும் தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்குரிய சில நூல்கள்

## சாமிஜி எழுதியவை

### இது இந்துமதம்

விற்பனையில் சாதனை செய்த நூல் "சைவத்தின் மேன்மையும் அதன் வரைவிலக்கணமும் சிந்தனையைத் தூண்டுவனவாயுள்ளன. சாமிஜியின் சிந்தனை வேகத்துக்கு ஈடுகொடுக்கும் வீறார்ந்த உரைநடை நூலை ஒரே மூச்சில் படித்து முடிக்கத் தூண்டுகிறது" என்று "மூதறிஞர் சொக்கன்" அவர்களால் பாராட்டப்பட்ட நூல். இரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவரும்.

### இருபத்தியொராம் நூற்றாண்டு சவால்களைச் சந்திக்க..

சிந்திக்க வைத்த பிரசுரம். ஆங்கிலக் கல்வி, கணனிக் கல்வி என்பவற்றின் முக்கியத்துவத்தை பல வருடங்களுக்கு முன்னரே விளக்கி தமிழ் இளைஞர்களுக்கு உற்சாகமூட்டி வழிகாட்டிய நூல்.

### கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்.

"சைவம் வீறுடன் எழுந்து விரைந்து வளரவும் உலக மெலாம் தமிழ் பரவி நிலைத்து நிற்கவும் கோயில் பூசைகள் அனைத்தும் உடனே தமிழாக வேண்டும்" என்ற கருத்தை அழகாகவும் தெளிவாகவும் விளக்கும் நூல். இப்பொழுது விற்பனையாகிறது.

### மனிதர்களின் தேவைகள்

மனிதர்களின் நடத்தைகளுக்குக் காரணம் அவர்களின் தேவைகள். "சாமிஜி சற்று வித்தியாசமான எழுத்தாளர். புதிதாகவும் புதுமையாகவும் சிந்தித்து கவர்ச்சிகரமாக எழுதுகிற ஒரு சிறந்த எழுத்தாளர்" என்று ஈழத்தின் மூத்த எழுத்தாளர்



மறுபக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"வரதர்" அவர்களால் பாராட்டப்பட்டு அவரது வரதர் வெளியீடாகவே வெளிவந்தநூல். இப்பொழுது விற்பனையாகிறது.

## DANGER – பிராமண மந்திர பூசைகள்

பிராமண மந்திர பூசைகளின் உண்மைத் தன்மை என்ன? பிராமணனின் ஆசாரம் என்ன? வடமொழி மந்திரங்கள் யாரை நோக்கிச் சொல்லப்படுகின்றன? பூசைகளில் வடமொழி பயன்படுத்தப்படும் காரணம் என்ன? பலரது மதிப்புக்கும் வணக்கத்துக்கு முரிய காஞ்சிப் பெரியவரின் கருத்துக்களைத் தொகுத்துத் தந்து விளக்கும் நூல்.

## பண்டிதை பொன்.பாக்கியம் எழுதியது
## தமிழ் செய்த அற்புதங்கள்

பெரியபுராண நிகழ்ச்சிகள் சில தெரிந்தெடுக்கப்பட்டு அழகான தமிழில் சுவையாக எழுதப்பட்டுள்ளன.

பழைய நூல்களில் சொல்லப்பட்டுள்ள தமிழ் செய்த அற்புதங்களை அவசர யுகத்தில் வாழும் புதிய பரம்பரையினர் தெரந்து கொள்ள உதவும் நூல்.

நமது வாழ்நாளிலேயே நமது கண்களுக்கு முன்னாலேயே யாழ் மண்ணில் தமிழ் செய்த மகத்தான சில அற்புதங்கள் முகவுரையில் ஆவணப்படுத்தப்பட்டிருப்பது இந் நூலின் தனி விசேடம்.

**சைவ சித்தாந்த தமிழ் நிலையம்**

*சூரியகாந்தி*

**138 ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.**

தொலைபேசி – **021-2222365**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பில் உள்ள தோத்திரங்களை நாள் தோறும் பாராயணம் செய்து வந்தால்....

தீராத நோய்கள் தீரும், செல்வமும் புகழும் சேரும், பகைவர் பலம் அழியும், அமைதியும் இன்பமும் நிறையும்.

நினைத்ததெல்லாம் நடக்கும். நல்லதையே நினைக்கச் செய்யும்.

இது அனுபவ உண்மை.

சைவ சித்தாந்த தமிழ் நிலையம்
சூரியகாந்தி
13௮, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்
தொலைபேசி - 0௨௧ ௨௨௨ ௨365

விலை ரூபா 60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org